பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 28 புதன்கிழமை 13.08.2025 கதிர் 277

## இனிது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்அரசுக்கட்சிதனித்துநின்றுஅதிக ஆசனங்களைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து கஜேந்திரகுமார் எப்போது செய்தியாளர்களைச்சந்தித்தாலும் ☞ 2

# மக்களின் உயிரைக் காப்பது அரசுத் தலைவரின் கடமை

### துப்பாக்கிச் சூடுகளை எதிர்த்து சஜித் அறிக்கை

தேசிய பாதுகாப்பு தொடர்பில் எமக்கு வகுப்பெடுப்பதாகக் கூறிய பாதுகாப்பு பிரதி அமைச்சரின் தேர்தல் தொகுதியிலும் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது. ஆளும்தரப்பால் இந்தக் கொலைக் காலாசாரத்தை தடுக்க முடியாதுபோயுள்ளது. தேசிய பாதுகாப்பை உறுதி செய்து, மக்களின் உயிரைப் பாதுகாப்பதுஅரசுத்தலைவர்தலைமையிலான ஆளும்தரப்பின்பொறுப்பாகும்எனஎதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்கிழமை அறிக்கை யொன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாளுக்கு நாள் நாடு பூராகவும் கொலைக் காலாசாரம் பரவி வருகிறது. ☞ 2

# பலஸ்தீனத்தில் ஊடகவியலாளர்கள் கொல்லப்படுவதற்கு கடும் கண்டனம்

### சுதந்திர ஊடக இயக்கம் தெரிவிப்பு

பலஸ்தீனத்திலிருந்து செய்தி சேகரிக்கும் ஊடகவியலாளர்கள் கொல்லப்படுவதை வன்மையாகக் கண்டிப்பதாக சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இயக்கத்தின் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

காசா நகரத்தின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் அல் ஜசீராவுக்கு செய்தி வழங்கும் ஐந்து ஊடகவியலாளர்கள் கொடூரமாக கொல்லப்பட்டுள்ளனர். உலகப்புகழ்பெற்ற நிருபர் அனஸ் அல்-ஷெரிஃப்பும் கொல்லப் பட்டவர்களில் ஒருவராவார். அவரும் அவரது ஊடகவியலாளர்கள் குழுவும் அல்-சிஃபா மருத்துவமனைக்கு அருகிலுள்ள ☞ 3

# சபரிமலைக்கான யாத்திரைக்கு இலங்கை அரசு அங்கீகாரம்

இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட புனித யாத்திரிகர் தலமாக சபரிமலை வழிபாட்டுத் தலத்தைப் பிரகடனப்படுத்தல் மற்றும் வசதிகளை வழங்கும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பக்தர்களுக்கான போக்குவரத்து மற்றும் வீசா வசதிகளை இலகுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இந்த தீர்மானம் எடுக்கப்படும் இரு பிரதான காரணிகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது. பக்தர்களுக்கான போக்குவரத்து வசதிகள் மற்றும் வீசா வசதிகள் தொடர்பிலேயே அவதானம் செலுத்தப்பட்டது. இவ்விரண்டுக்குமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதை இலக்காகக் கொண்டே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட புனித யாத்திரிகர் தலமாக சபரிமலை வழிபாட்டுத் தலத்தைப் பிரகடனப்படுத்தல் மற்றும் வசதிகளை வழங்கும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. நீண்டகாலமாக இலங்கையின் இந்துபக்தர்கள் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 01 ஆம் தொடக்கம் அடுத்த வருடத்தின் ஜனவரி ☞ 3

### இராணுவ இருப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்

# கடையடைப்பு ஓகஸ்ட் 18

### தமிழ் அரசுக் கட்சி அறிவிப்பு

வட,கிழக்குமாகாணங்களில்காணப்படும் அளவுக்கதிகமானபடையினரின்இருப்புக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தி தமிழ் அரசுக் கட்சியினால் அறிவிக்கப்பட்டிருந்த கடையடைப்புப் போராட்டம் ஓகஸ்ட் 15 வெள்ளிக்கிழமையில் இருந்து ஓகஸ்ட் 18 திங்கட்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது. மன்னார் மடுமாதா தேவாலய முதன்மைத் திருவிழா மற்றும் நல்லூர் கந்தசுவாமி ஆலயவருடாந்தஉற்சவம்ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு இந்தத் திகதி மாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது. மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வருடனான ஆலோசனையின் பின்னர் போராட்ட நாள் மாற்றம் குறித்து நேற்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இந்த அறிவிப்பை வெளியிட்டது

வட, கிழக்கு மாகாணங்களில் தொடரும் அதிகளவிலானஇராணுவப்பிரசன்னத்துக்கு எதிர்ப்பைவெளிப்படுத்திஎதிர்வரும்ஓகஸ்ட் 15 திங்கட்கிழமை இரு மாகாணங்களும் முழுமையாக முடங்கும் வகையில் ☞ 2

# அதிகாரக் கதிரையில் பசைபோல் ஒட்டிக்கொள்ளும் எண்ணமில்லை

### அரசுத் தலைவர் அநுரகுமார தெரிவிப்பு

பதவியை ஏற்கும்போது பதவியில் இருந்து வெளியேறும் காலத்தையும் நிர்ணயித்துக்கொண்டோம். அதிகாரக்கதிரையில் பசைபோல் ஒட்டிக்கொள்ளும் எண்ணம் எமக்கில்லை. பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் மக்கள் மோசடியாளர்களிடமிருந்த அதிகாரத்தை எம்மிடம்ஒப்படைத்தார்கள்.மக்களின்எதிர்பார்ப்பை நாங்கள் நிச்சயம் நிறைவேற்றுவோம். அதிகாரத்தை இளைஞர் தலைமைத்துவத்திடம் ஒப்படைப்போம்என அரசுத்தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

சுஹததாச உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்ற தேசிய இளைஞர் மாநாட்டில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

32 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற இந்த இளைஞர் மாநாடுஇ இந்த நாட்டின் இளைஞர்களை அரசியல் கைப்பாவைகளாக மாறாது, நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்கும் தலைவர்களாக மாற்றுவதற்கான ஆளும்தரப்பின் திட்டத்தைக் குறிக்கிறது.

இளைஞர் சம்மேளம் தொடர்பில் பலவிடயங்கள் பேசப்படுகின்ற பின்னணியில் தான் தேசிய ☞ 2

## புதிய பொலிஸ் மா அதிபராக பிரியந்தவை நியமிக்க அனுமதி

நாட்டின் 37ஆவது பொலிஸ் மாஅதிபராக பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரியவை நியமிக்க அரசுத் தலைவர்யால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்கு அரசமைப்பு பேரவை ஏகமனதாக அங்கீகாரமளித்துள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் அரசமைப்பு பேரவை நேற்றுநாடாளுமன்றகட்டடத்தொகுதியில் கூடியது. நாட்டின் பொலிஸ் மா ☞ 6

# கடுமையான வரையறைகளுடன் ஏற்றுமதிக்காக கஞ்சா உற்பத்தி

### அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்

முதலீட்டு வலயங்களில் ஏற்றுமதிக்காக மாத்திரம் கஞ்சா உற்பத்திக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடும் வரையறைகள் பாதுகாப்புக்கு மத்தியில் முதலீட்டுசபை மற்றும் ஆயர்வேத திணைக்களம் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருவதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில்அமைச்சர்மேலும்குறிப்பிடுகையில்,

முதலீட்டு வலயங்களில் கஞ்சா உற்பத்திக்கு 2024 ஏப்ரலில் அப்போதைய இராஜாங்க அமைச்சரது காலத்தில் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கான விதிமுறைகளும் அப்போதைய கால கட்டத்திலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. அதற்கமையமுதலீட்டுசபையைதொடர்புபடுத்தி இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க முடியும். எனினும் கடந்த காலங்களில் இதற்காக 7 முதலீட்டாளர்கள் முன்வந்த போதிலும், இதற்கான வழிமுறைகளில் காணப்பட்ட குறைபாடுகளால்காலதாமதம்ஏற்பட்டிருந்தது.

இதற்கு ஆயர்வேத திணைக் களத்திடமும் அனுமதியைப் பெற்றுக் ☞ 2

# பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவு

### பொதுஜன பெரமுன அறிவிப்பு

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். குண்டுத்தாக்குதல் பற்றி கிடைத்த புலனாய்வு தகவல்களை மேசையில் பத்திரப்படுத்தி வைத்து பொறுப்பினை மீறியவர்கள் இந்த அரசுத் தரப்பில் உயர்பதவிகளில் ☞ 6

# பிரதமரைப் பதவி நீக்கவேண்டிய அவசியம் எதுவும் ஏற்படவில்லை

### அமைச்சரவைப் பேச்சாளர் அறிவிப்பு

'சுபரீம்செட்' செய்மதி நாட்டுக்கு இலாபமீட்டித் தரக்கூடியதாக அமைந்திருந்தால் 13 ஆண்டுகள் ராஜபக்சக்கள் அமைதியாக இருந்திருக்க மாட்டார்கள். முதலீட்டு சபை வழங்கிய தகவல்களையே பிரதமர் ஹரிணி அமரசூரிய நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். எனவே இதனை அடிப்படையாகக் கொண்டு அவரைப் பதவி நீக்க வேண்டிய அவசியம் இல்லை என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று ☞ 2

# பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான பிரேரணை சபாநாயகரிடம் கையளிப்பு

அருண ஜயசேகரவை பாதுகாப்பு பிரதி அமைச்சராக வைத்துக் கொண்டு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வது நாடாளுமன்றத்தின் மீதான மக்கள் நம்பிக்கையைப் பலவீனமடையச் செய்யும். ஆகவே அவரைப் ☞ 3

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தமிழ் அரசுக் கட்சியை வசைபாடுவதையே தொழிலாகக் கொண்டுள்ளார். தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராளியாக, அகில இலங்கை தமிழ் காங்கிரஸை நிலைநிறுத்தி இரு கட்சி ஆட்சி முறைமை ஒன்றை வடக்கு கிழக்கில் ஏற்படுத்த முயற்சிப்பதுதான் அவரது நீண்ட நாள் திட்டம். அதனால்தான் விடுதலைப் புலிகள் மறைந்த கையோடு அவர் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை உடைத்துக்கொண்டு முதன் முதலில் வெளியே வந்தார். 10 ஆண்டு காலத் தீவிர முயற்சியின் பின்னர் அந்த முயற்சியின் பயனாக 2020 பொதுத் தேர்தலில் அவருக்கு ஒரு சிறு முன்னேற்றம், வெற்றி கிட்டியது. இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைப் பெற்றார்.

இருந்தாலும் அடுத்த 5 வருடங்களிலேயே அவரது செல்வாக்குச் சரிந்து மிச்சத்தில் சொச்ச வாக்குகள் மூலமே 2025இல் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றார். அதன் பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சற்று நிமிர்ந்தாலும் தமிழ் அரசுக் கட்சியிடம் மட்டுமல்ல ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியிடமும் அவர் தோற்றுப்போனார். ஏனெனில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளை வரிசைப்படுத்தினால் அவரது கட்சிக்கு மூன்றாவது இடமே கிடைத்தது. சங்குக் கூட்டணிக்கு 89,177 வாக்குகளும் தமிழ் காங்கிரஸிற்கு 70,944 வாக்குகளும் மட்டுமே கிடைத்தன. இந்த இரு கட்சிகளின் வாக்குகளையும் சேர்த்துக்கூட்டினால்கூட அது தமிழ் அரசுக் கட்சி பெற்ற 307,657 வாக்குகளுக்கு கிட்டவும் வராது. இன்னும் சொல்லப்போனால் வெறும் அரைவாசி வாக்குகளைத்தான் இந்த இரு கட்சிகளாலும் பெறமுடிந்தது.

இதுதான் கஜேந்திரகுமார் தற்போது மீண்டும் தமிழ் அரசுக் கட்சியை இலக்கு வைத்துஅரசியல்செய்யத்தொடங்கியிருப்பதன் பின்னணி. அதனால்தான் எல்லாச் செய்தியாளர்கள் மாநாட்டிலும் அவர் தமிழ் அரசுக் கட்சி தமிழ் அரசுக் கட்சி என்றே பேசிக்கொண்டிருக்கிறார். தனக்கான ஒரு கட்சி, தனக்கான ஒரு கூட்டணி, தன்னோடு ஒப்பந்தம் போட்டுக்கொண்ட கூட்டணி என்பவற்றை எல்லாம் மறந்து அவரது கண்ணுக்குத் தெரிந்துகொண்டே இருப்பது இப்போதைக்கு தமிழ் அரசுக் கட்சி மட்டும்தான். அடுத்து வரவுள்ள எந்தவொரு தேர்தலுக்கு முன்பாகவும் தமிழ் அரசுக் கட்சியின் வாக்கு வங்கியை வீழ்த்திவிடவேண்டும் என்பதில் குறியாக இருக்கிறார். அதற்காக மக்களிடம் இருந்த அந்தக்கட்சியைஅந்நியப்படுத்திவிடவேண்டும் என்று தலைகீழாக நிற்கிறார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனது கட்சியைவிட அதிக வாக்குகளைப் பெற்ற மற்றொருகூட்டணியானஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டணியை ஒரு ஒப்பந்தத்தின் மூலம்தனதுதலைமையைஏற்கவைத்ததன் மூலம் அதனைச்செல்லாக்காசாக்கி விட்டார். தமிழ் அரசுக் கட்சியிலிருந்தும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் இருந்து பிரிந்து வந்த உதிரிகள் அவரையே நிபந்தனையின்றித் தமதுதலைவராகஏற்றுக்கொண்டுவிட்டார்கள் என்பதால் அவர்களும் ஒரு பொருட்டல்ல. இப்போது அவருக்கு இருக்கும் ஒரே எதிரி தமிழ் அரசுக் கட்சிதான் அதனால்தான் அவர் அந்தக் கட்சியை இலக்குவைத்தே தொடர்ந்து காய் நகர்த்தி வருகின்றார்.

இல்லையென்றால் கடைசியாக யாழ்ப்பாணத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர், தமிழ்க் கட்சிகளிடையே (அவர் தமிழ்க் கட்சி என்று கருதுவது தமிழ் அரசுக் கட்சியை மட்டும்தான், ஏனெனில் மற்றெல்லாக்கட்சிகளும்அவருடன்உள்ளன) இப்போது இணக்கப்பாட்டை ஏற்படுத்தத் தவறினால் தமிழ்த் தேசியம் அழியும் என்று ஆருடடம் கூறியிருக்கிறார்.

''அடுத்த 5 வருசம் தமிழ் தேசியம் முன்னோக்கி செல்ல போகிறதா பின்னோக்கி செல்ல போகிறதா என்ற ஆபத்து ஏற்பட்டு உள்ளது. தமிழ்த் தேசியம் பாதுகாக்கப்பட்டு முன்னோக்கி பயணிக்க வேண்டுமாக இருந்தால் தமிழ் அரசுக் கட்சி உட்பட நாம் அனைவரும் கட்டாயம் இணக்கப்பாட்டிற்கு வர வேண்டும்.

இவ்வாறு ஐந்து வருடத்தில் நாங்கள் ஒரு பொது நிலைப்பாட்டிற்கு வராவிட்டால் தமிழ் இனம் அழியும். ஆகவே தமிழினத்தை பாதுகாக்க எங்களுக்கிடையே நிச்சயம் இணக்கபாட்டை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறான இணக்கப்பாட்டை ஏற்படுத்த நாங்கள் தொடர்ந்தும் முயற்சிப்போம். எனவே திட்டமிட்ட பொய்களை குற்றச்சாட்டுக்களை விடுத்து இனத்திற்காக இணங்கி செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்“ என அவர் மேலும் தெரிவித்தார்.

இப்போது தமிழ் அரசுக் கட்சியைத் தனது தலைமையின் கீழ் ஒற்றுமைக்கு வாங்கோ வாங்கோ என்று கூவிக் கூவி அழைக்கும் கஜேந்திரகுமார்தான் முதன் முதலில் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையிலிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்து வெளியேறியவர். தமிழ் அரசுக் கட்சி புலி நீக்க அரசியலை முன்னெடுக்கிறது என்று கூறி அரசியல் செய்தவர். பின்னர் தமிழ் அரசுக் கட்சி கொழும்பு ஆளும்தரப்புகளின் முகவர் என்று கூறி அரசியல் செய்தவர். 2025 தேர்தலில்கூட தமிழ் அரசுக் கட்சிக்கு வாக்களித்தால் அது கொழும்புஆளும்தரப்புக்களுக்குஅழிக்கப்படும் வாக்குகளாகவே இருக்கும், ஒற்றையாட்சி அரசமைப்புக்கு வழங்கும் அங்கீகாரமாக இருக்கும் என்றெல்லாம் கூறியவர். இப்போது அதே தமிழ் அரசுக் கட்சியைத்தான் அவர் தன்னோடு இணக்கப்பாட்டுக்கு வாங்கோ, ஒற்றுமைக்கு வாங்கோ, சேர்ந்தியங்க வாங்கோ என்று மூக்கால் அழுகிறார்.

அப்படி அவர் தன்னோடு சேர்த்தணைத் துக்கொள்ளத்தக்க வகையில் அல்லது தமிழ் அரசுக் கட்சியோடு தான இணங்கி அரசியல் செய்யத்தக்க வகையில் தமிழ் அரசுக் கட்சி எப்போது புலி நீக்க அரசியலைக் கைவிட்டது, கொழும்பு ஆளும்தரப்பின் முகவர் என்ற நிலையிலிருந்து விலகியது, ஒற்றையாட்சிக்கு எதிரான நிலைப்பாட்டை எப்போது எடுத்தது, தமிழ் அரசுக்கு வாக்களித்தால் அது கொழும்பு ஆளும்தரப்புக்கு வழங்கப்படும் வாக்குகளாக மாறாத நிலை எப்போது முதல் ஏற்பட்டது என்பதையெல்லாம் மக்களுக்கு முதலில் விளக்கமாகச் சொல்லவேண்டும் அல்லவா?

அதையெல்லாம்தெளிவுபடுத்தாமல்தமிழ் அரசுக் கட்சியைப் பற்றிப் புலம்பிக்கொண்டே இருந்தால், இணக்கப்பாட்டுக்கு வருகிறார்கள் இல்லை, ஒற்றுமைக்கு வருகிறார்கள் இல்லை என்று அழுதுகொண்டே இருந்தால் மக்களுக்கும் நம்பக் கஸ்டமாக இருக்கும் அல்லவா? என்ன மக்களே நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கடையடைப்பு ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் அமைய ஒத்துழைக்கவேண்டும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

இந்தப் போராட்டத்திற்குத் தாமும் ஆதரவளிப்பதாகத்தமிழ்முற்போக்குக்கூட்டணி மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன ஏற்கனவே அறிவித்திருக்கின்றன.

போராட்ட நாள் மாற்றம் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வட, கிழக்கு முழுவதும் எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று கடையடைப்பு அனுட்டிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் மடுமாதா தேவாலயத்தில் அன்றைய தினம் விசேட நிகழ்வு நடைபெறவிருப்பதனால், கடையடைப்பு அனுட்டிப்பதற்கான தினத்தை வேறொரு திகதிக்கு மாற்றுமாறு மன்னார் மறைமாவட்ட ஆயர்அடிகளார்வேண்டுகோள்விடுத்திருந்தார்.

இந்நிலையில் இன்று (நேற்று) மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வருடன் நடாத்தப்பட்டஆலோசனையின்பின்னர்இந்தத் திகதியைமாற்றுவதென்றுதீர்மானிக்கப்பட்டது.

இம்மாற்றத்தை அடுத்து நல்லூர் கோவில் திருவிழா நிகழ்வுகளையும் அனுசரித்து, கடையடைப்பு அனுட்டிப்பதற்கான திகதியை எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமைக்கு மாற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனைவரும் இந்த மாற்றத்தை ஏற்றுக்கொண்டு வட, கிழக்கு முழுவதையும் முடக்கித் தமது எதிர்ப்பைப் பாரியளவில் வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதமரைப்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வாய்கிழமை இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

உலகில் தகவல் தொலை தொடர்பாடல் தொழிநுட்பத்துக்காக சர்வதேச தொலை தொடர்பாடல் சங்கம் ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதித்துவ அலுவலகமாக செயற்படுகின்றது. இதன் ஊடாகவே சுப்ரீம் செட் தொடர்பான தொழிநுட்ப மற்றும் ஒருங்கிணைப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. சர்வதேச தொலை தொடர்பாடல் சங்கமானது செய்மதியொன்றை அனுப்பும் செயற்பாட்டை மூன்று பிரதான வழிமுறைகளின் கீழ் செயற்படுத்துகின்றது.

உலகலாவிய ரீதியில் அந்த வழிமுறைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த நடைமுறைகளுக்கு ஆகக் குறைந்தது 3 ஆண்டுகளும் ஆகக் கூடியது 7 ஆண்டுகளும் எடுக்கும். சர்வதேச தொலை தொடர்பாடல் சங்கத்தில் இலங்கை தொலைதொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அங்கத்துவம் வகிக்கிறது. அதற்கமைய இலங்கைக்கு 125.5 மற்றும் 50 ஆகிய இரு புவிசரிதவியல் ஸ்தளங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

சர்வதேச தொலை தொடர்பாடல் சங்கம் வழங்கியுள்ள தகவலுக்கமைய இவ்விரு ஸ்தளங்கள் இலங்கைக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதேவேளை, ஆப்கானிஸ்தான், கிரிகிஸ்தான், மோல்தோவா, நேபாளம், ரொமேனியா போன்ற நாடுகளுக்கும் தேவையேற்படின் தடையின்றி இந்த இடங்களில் அவர்களது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் இந்த இடங்களில் இலங்கையின் பெயரில் எந்தவொரு செய்மதியும் இல்லை என்பதே சர்வதேச தொலை தொடர்பாடல் சங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள தகவலாகும். 'சுப்ரீம் செட் 1' என்ற செய்மதியொன்று காணப்படுகின்றதா என்பது தொடர்பில் சர்வதேச தொலை தொடர்பாடல் சங்கத்தின் ஊடாக ஆராயப்பட்டது. ஆனால் அவ்வாறானதொரு செய்மதியும் இல்லை.

எவ்வாறிருப்பினும் 'சுப்ரீம் செட் 1' என்ற செய்மதி பின்னர் 'சீனா செட் 1' எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கான புவிசரதவியல் ஸ்தளத்தில் 'சீனா செட் 1' என்ற செய்மதி இருப்பதாக சர்வதேச தொலை தொடர்பாடல் சங்கத்தின் இணையதளத்திலும் இல்லை. 'சுபரீட் செட்' என்ற பெயரில் செய்மதியொன்று இருக்கின்றதா என்று ஆராய்ந்த போது இலங்கைக்கு உரித்தான புவிசரிதவியல் ஸ்தானங்களுக்கு அப்பால் 'சீனா செட்' செய்திமதிகள் காணப்படுவதாகவே தெரியவந்துள்ளது.

மாறாக இலங்கைக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் அல்ல. 'சுபரீம் செட்' என்ற நிறுவனத்துக்கும் இலங்கை முதலீட்டு சபைக்கும் 2011.05.23 அன்று ஒப்பந்தமொன்று எட்டப்பட்டுள்ளது. ரன்வன் ரன்வத் என்ற நிறுவனமே 'சுப்ரீம் செட்' நிறுவனத்தின் கணக்காய்வு நிறுவனமாகும். இந்த நிறுவனம் வழங்கியுள்ள கணக்காய்வு அறிக்கைக்கமைய 12 பில்லியன் ரூபா பெறுமதியான செய்மதியின் சொத்து 2013, 2014 ஆண்டுகளின் நிதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆனால் 2014, 2015 ஆண்டுகளில் இந்த சொத்து நிதி அறிக்கையிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

'சுபரீம் செட்' நிறுவனம் முதலீட்டு சபைக்கு வழங்கியுள்ள அறிக்கைக்கமைய செய்மதியூடாக வழங்கப்பட்டுள்ள வருமானமாக எந்தவொரு தொகையும் குறிப்பிடப்படவில்லை. இந்த நிறுவனம் செய்மதி மாத்திரமின்றி மேலும் பல சேவைகளையும் வழங்குகிறது. அதற்கமைய அவர்களின் கணக்காய்வு அறிக்கைகளில் 2015, 2016, 2017, 2018ஆம் ஆண்டுகளில் நிதிகையாளுகை 19 மில்லியன் ரூபா, 28 மில்லியன் ரூபா, 34 மில்லியன் ரூபா என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் செய்மதியின் ஊடாகக் கிடைக்கப் பெற்ற வருமானமாக அவை எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. அதேபோன்று 2016இல் 'சுப்ரீம் செட்'; நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைக்கமைய சைனா கிரேட் வோல் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்துக்கமைய 'சுப்ரீம் செட் 1' செய்மதிக்கு உரித்தான சொத்துக்களை நீக்கிக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவே உண்மை நிலைமையாகும்.

முதலீட்டு சபையானது 2016 நவம்பர் 18ஆம் திகதி நான் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு இதற்கு சமமான பதிலே வழங்கப்பட்டது. எவ்வாறிருப்பினும் தகவல்களுக்கிடையில் வேறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுகிறது என்று எண்ணுகின்றோம். இவற்றுக்கு அப்பால் இது தொடர்பில் யோஷித ராஜபக்சவுக்கு ஏதேனும் தகவல் தெரிந்திருந்தால் அவர் அவற்றை வெளியிட்டு இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

இது நாட்டுக்கு இலாபமீட்டிதரக் கூடிய வேலைத்திட்டமாக அமைந்திருந்தால் 13 ஆண்டுகள் ராஜபக்சர்கள் மௌனம் காத்திருக்க மாட்டார்கள். முதலீட்டு சபையால் வழங்கப்பட்ட தகவலையே தான் தெரிவிப்பதாக பிரதமர் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டிருந்தார். முதலீட்டு சபை விரைவில் இது தொடர்பில் மேலும் பல தகவல்களை வெளிப்படுத்தும். அத்தோடு தொலைதொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவும் இது தொடர்பில் சர்வதேச தொலை தொடர்பாடல் சங்கத்திடம் தகவல்களைக் கோரியிருக்கின்றது.

வழங்கப்பட்ட தகவல்களிலும் சில குறைபாடுகள் உள்ளன. அச்சு பிரச்சினைகளால் கூட அந்த தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். விரைவில் சரியான தகவல்கள் வெளிப்படுத்தப்படும். இதற்காக எந்த வகையிலும் பிரதமர் பதவி நீக்கப்பட மாட்டார். அதற்கான அவசியமும் கிடையாது என்றார்.

## அதிகாரக் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் மாநாடு நடத்தப்படுகிறது. நாட்டில் பல்வேறு அரசநிறுவனங்கள் அரசஅதிகாரபரிமாற்றத்துக்காகவே உருவாக்கப்பட்டிருந்தது. இளைஞர்களின் அபிலாசைகளை அந்நிறுவனங்கள் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. இந்நிறுவனங்களில் அரசியல்வாதிகளின் பிள்ளைகளுக்கும், அவர்களின் உறவினர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது. சாதாரன இளைஞர் யுவதிகளுக்கு இடமளிக்கப்படவில்லை.

அரசியல் மற்றும் குடும்ப அதிகாரங்களை தக்கவைத்துக் கொள்வதற்காகவே இந்நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. 2024 ஆம் ஆண்டு அரசியல்மாற்றத்துடன் இந்நிலைமை மாற்றியமைக்கப்பட்டது. இதனால் ஒருசிலர் தற்போது கலக்கமடைவது ஒன்றும் புதிதல்ல,

அரசியல் மற்றும் குடும்ப அதிகாரத்தை கட்டியெழுப்பவும், அவற்றை தக்கவைத்துக் கொள்வதற்கும் இளைஞர் மன்றங்கள் பயன்படுத்திக்கொள்ள கூடாது என்பதே எமது நிலைப்பாடு. இளைஞர்களின் கையில் தான் நாட்டின் எதிர்காலம் என்பதை சொல்லளவில் பார்க்காமல், செயலளவில் செயற்படுத்துவோம்.

தனது அரசியல் அதிகாரத்தைப் பாதுகாப்பதில் பங்காளர்களாக அல்லாமல், இளைஞர்களுக்கு அவர்களின் சரியான இடத்தை வழங்குவதன் மூலம் தனது எதிர்காலத்தைத் தாமே தீர்மானிக்கும் சக்தி கொண்ட ஒரு இளைஞர் சமூகத்தை உருவாக்குவதே ஆளும்தரப்பின் நோக்கம் எதிர்கால இளைஞர் தலைமுறை உலகத்தின் முன்னிலையில் நாட்டை வென்றெடுக்கும் மற்றும் மற்றவர்கள் மீது இரக்கம் காட்டும் ஒரு இளைஞர் தலைமுறையாக இருக்க வேண்டும். இந்த நாட்டை ஒப்படைப்பதற்குத் தகுதியுள்ள அந்த இளைஞர் இயக்கத்தை உருவாக்குவது ஆளும்தரப்பின் முயற்சி வலியுறுத்தினேன். இளைஞர்கள் இதற்குத் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

பதவியில் இருந்து வெளியேறும் தினத்தை மனதில் வைத்துக் கொண்டுதான் ஆட்சியை பொறுப்பேற்றுள்ளோம். பதவியை நிலையானதாக தக்கவைத்துக் கொள்ளும் நோக்கம் எமக்கு கிடையாது. மோசடியாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற இந்த அதிகாரத்தை இளைஞர்களுக்கு நாங்கள் கையளிப்போம். அதிகார கதிரையில் பசைபோன்று ஒட்டிக்கொள்ளும் எண்ணம் எமக்கில்லை. நாட்டை பொறுப்பேற்கும் சிறந்த இளைஞர் தலைமைத்துவத்தை நாங்கள் உருவாக்குவோம்.

புதிய தொழிற்றுயை உருவாக்கி தொழிலின்மை பிரச்சினைக்கு தீர்வு காணும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. தனியார் தரப்பினரின் முழுமையான ஒத்துழைப்பு இதற்காக பெற்றுக்கொள்ளப்படும் என்றார்.

## கடுமையான....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ள வேண்டும். சுற்றுலா அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட மேலும் பல நிறுவனங்களிடம் இதே போன்று அனுமதிபெறவேண்டியுள்ளது. கடும்பாதுகாப்பு விதிமுறைகளுக்கமையவே இதற்கான அனுமதி வழங்கப்படும். உற்பத்தியின் அனைத்து பங்குகளும் ஏற்றுமதிக்காகவே அனுமதிக்கப்படும்.

முதலீட்டு சபை மற்றும் ஆயர்வேத திணைக்களம் இணைந்து இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. முதலீட்டு வலயங்களில் மாத்திரமே இந்த உற்பத்திகள் இடம்பெறும்.

தொடர்ச்சி 3ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

## கடுமையான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு செய்தால் மாத்திரமே முதலீட்டாளர்களுக்கு நிவாரணத்தையும் வரையறைகளையும் வழங்க முடியும். இது கடும் கட்டுப்பாடுகளுக்குள் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டமாகும் என்றார்.

## பலஸ்தீனத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடாரமொன்றில் தங்கியிருந்தபோது இலக்குவைக்கப்பட்ட ட்ரோன் தாக்குதலின் மூலம்கொல்லப்பட்டனர். அதன்அடிப்படையில் இது திட்டமிட்டதொரு கொடூரமான தாக்குதல் என்பது புலப்படுகிறது.

காசாவில் நடைபெற்றுவரும் பலஸ்தீன இனப்படுகொலை பற்றிய உண்மைகளை அம்பலப்படுத்திய சக ஊடகவியலாளர்களை நாம்வணங்குகிறோம். அவர்களின்இழப்பிற்கு நாங்கள் இரங்கல் தெரிவித்துக்கொள்கிறோம். இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட மக்களின் குரல்களை நசுக்குவதற்காக, வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் நாட்டிற்குள் நுழைவதற்குதடைவிதிக்கப்பட்டுள்ளசூழலில், பலஸ்தீனத்திலிருந்து செய்தி சேகரிக்கும் ஊடகவியலாளர்கள் கொல்லப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் அமைப்பின் அறிக்கைகளின்படி, 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் பலஸ்தீனத்தில் 186 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். பி.பி.சி, ஏ.பி மற்றும் ஏ.எஃப்.பி ஆகிய சர்வதேச செய்திச்சேவைகள் தங்கள்நிருபர்கள்எதிர்கொள்ளும்கடுமையான கஷ்டங்களை எடுத்துரைத்து ஒரு கூட்டு அறிக்கையினை வெளியிட்டுள்ளன. அவர்களிடம் உயிர்வாழ போதுமான உணவு கூட இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளன. பி.பி.சி அதன் மூன்று செய்தியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பல நாட்களாக பட்டினியில் வாடுவதாக ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

பலஸ்தீன இனப்படுகொலையின்போது இஸ்ரேலிய அரசாங்கம் தொடங்கிய ஊடக அடக்குமுறையின் உண்மையான தன்மை இதுதான். ஒரு நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிசெய்ய அல்லது பயங்கரவாதத்திற்கு பதிலடி கொடுக்க வேண்டிய உண்மையான தேவைக்கு அப்பாற்பட்ட இந்தப் படுகொலைகளையும், அதனால் பாதிக்கப்பட்ட பலஸ்தீன மக்களின் குரல்களைநசுக்கப்பயன்படுத்தப்படும்ஊடகஅடக்குமுறையையும் கண்டிப்பதில எங்களுடன் உன்றிணையுமாறு ஒட்டுமொத்த உலக சமுதாயத்தினரையும்நாங்கள்கோருகின்றோம் எனஅவ்வறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றும் கூட, நாட்டின் பாதுகாப்பு பிரதி அமைச்சரினது தேர்தல் தொகுதியான ஹோமாகம மீகொட பகுதியில் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் ஒருவர் சுட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இன்றளவில் கூட ஆளும்தரப்பால் இந்தக் கொலைக் காலாசாரத்தை தடுக்க முடியாதுபோயுள்ளது. தேசிய பாதுகாப்பு குறித்த வகுப்பிற்கு ஒரு நாற்காலியை எடுத்து வருமாறு தெரிவித்த பாதுகாப்பு பிரதி அமைச்சரின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் கூட இந்தக் கொலை இடம்பெறுகின்றன.

பாதாள உலக கும்பல்கள், திட்டமிட்ட அடிப்படையில் குற்றச் செயல்களில் ஈடுபடும் கும்பல்கள், கொலைகாரர்கள் தோட்டாக்கள், குண்டுகள், துப்பாக்கிகள், வாள்கள் போன்றவைக் காட்டியும் பயன்படுத்தியும் சமூகத்தின் கட்டுப்பாட்டை தமது பிடியில் எடுத்துள்ளனர். அரசுத் தலைவர் அனுரகுமார திசாநாயக்கதலைமையிலானஅரசாங்கத்திடம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு உள்ளதா என்று தான் கேள்வி எழுப்புகிறோம்.

இவ்வாறான கொலைச் சம்பவங்கள் தேசியப் பாதுகாப்புக்கு பிரச்சினையாக அமைந்து காணப்படவில்லை என்று அரசாங்கம்தொடர்ச்சியாகதெரிவித்துவருகிறது. நாட்டில் மக்கள் இறந்து கொண்டிருந்தால், அது தேசிய பாதுகாப்பு சார் பிரச்சினைகளில் ஒன்றாகும். தேசியபாதுகாப்பைஉறுதிசெய்து, மக்களின் உயிரைப் பாதுகாப்பது அரசுத் தலைவர் தலைமையிலான ஆளும்தரப்பின் பொறுப்பாகும். இவ்வாறுசெய்வதுநாட்டுக்கான கடமையாகும் என்றார்.

## பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவி நீக்கவேண்டும் என்ற யோசனை நாடாளுமன்றத்தில்நிறைவேற்றப்படவேண்டும் என வலியுறுத்தி எதிர்க்கட்சியினர் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவிடம் கையளித்துள்ளனர்.

பிரதானஎதிர்க்கட்சியானஐக்கியமக்கள்சக்தி உட்பட நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் நாடாளுமன்ற கட்டிடத்தொகுதியில் நேற்று சபாநாயகரை சந்தித்து நம்பிக்கையில்லா பிரேரணையை கையளித்தனர்.

இந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட 32 பேர் கைச்சாத்திட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்ககோவையின் 3 ஆம் பிரிவு, 6ஆம் அத்தியாயத்தில்'நாடாளுமன்றஉறுப்பினர்கள் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மீதான மக்கள் நம்பிக்கைக்கு அமைவாக செயற்பட வேண்டும்.அத்துடன் எந்நிலையிலும் பொது வளங்கள் பாவித்தல் உட்பட அவரது நடத்தை நேர்மையானதாக இருத்தல் வேண்டும்'என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கக்கோவையில் 9 ஆவது அத்தியாயத்தில்விதிமுறைகளில்'மனசாட்சிக்கு அமைவாக செயற்படல்,மக்களின் நம்பிக்கை மற்றும் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் நடந்துக்கொள்ளல்,வகிக்கும் பொறுப்பு மற்றும் கடமைகளில் தொடர்பில் பொறுப்புக்கூறல்' அவசியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர நாடாளுமன்ற உறு;ப்பினர்களின் ஒழுக்க நெறிமுறைகளை மீறியுள்ளமை தெளிவாக வெளிப்படுகிறது. அதேபோல் அரசியலமைப்பின்28ஆம்உபபிரிவுக்கமைய அடிப்படைபொறுப்பினைநிறைவேற்றுவதற்கு பிரதி அமைச்சர் தவறியுள்ளார் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புபிரதிஅமைச்சர்அருணஜயசேகர மீது 15 குற்றச்சாட்டுக்கள் நம்பிக்கையில்லா பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. குண்டுத்தாக்குதல்சம்பவம்இடம்பெற்றபோது அருணஜயசேகர கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக பதவி வகித்துள்ளார் என்பது பிரதான குற்றச்சாட்டாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அருண ஜயசேகர பாதுகாப்பு பிரதி அமைச்சராக பதவி வகிக்கின்ற நிலையில் பொதுமக்கள்பாதுகாப்பு மற்றும்நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சினால் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுவது விசாரணைகள் மீதான நம்பிக்கையை மலினப்படுத்துவதாக அமையும்.

அருண ஜயசேகரவை பாதுகாப்பு பிரதி அமைச்சராக வைத்துக் கொண்டு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வது நாடாளுமன்றத்தின் மீதான மக்கள் நம்பிக்கை பலவீனமடைய செய்யும்.ஆகவேஅவரைபதவிநீக்கவேண்டும் என்ற யோசனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்.

## சபரிமலைக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் 31ஆம்திகதி வரையான காலப்பகுதியில் இந்தியாவின் கேரளாவில் அமைந்துள்ள சபரிமலை ஐயப்பன் ஆலயத்தி;ற்குச் சென்று தரிசிக்கின்றனர்.

தற்போது ஆண்டுதோறும் 15,000 இற்கும் அதிகமான இலங்கையின் இந்து பக்தர்கள் கலந்து கொள்கின்ற தலயாத்திரை மையமாகவும்அமைந்துள்ளது. அதற்கமைய, இந்தியாவின்கேரளாமாநிலத்தில்அமைந்துள்ள சபரிமலை ஐயப்பன் ஆலயத்திற்கு இலங்கை இந்துயாத்திரிகர்களால்மேற்கொள்ளப்படுகின்ற வழிபாட்டு தரிசிப்பானது, இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட புனித தலயாத்திரையாகப் பிரகடனப்படுத்துவதற்கு புத்தசாசன, சமய மற்றும் காலாசார விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.




காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பாடசாலை மீள் சேர்க்கை: விளைவே முக்கியம்

கல்வி என்பது ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கப்பட வேண்டிய அடிப்படை உரிமை. அது வெறும் பாடப்புத்தக அறிவை அளிக்கும் இடமாக அல்லாமல், ஒரு சிறந்த குடிமகனாக வளர்க்கும் அடித்தளமாகவும் விளங்குகிறது. ஆனால், அண்மையில் வெளிவந்த புள்ளிவிபரங்கள், இலங்கையில் கல்வி உரிமை இன்னமும் பல குழந்தைகளுக்கு முழுமையாக கிடைக்கவில்லை என்பதை வருத்தத்துடன் நினைவூட்டுகின்றன.

கல்வி அமைச்சின் 2024ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி, நாட்டில் சுமார் 20,000 குழந்தைகள் முற்றிலும் கல்வி அமைப்பை விட்டு விலகியுள்ளனர். மேலும், 80,000 குழந்தைகள் முறையாகப் பாடசாலைக்கு வராமல் இருக்கின்றனர். அவர்கள் அடிக்கடி பாடசாலைக்கு வருவதில்லை. இந்தக் கணக்குகள், நாட்டின் எதிர்கால மனிதவளத் திறனுக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் ஒரு தீவிர அச்சுறுத்தலாகும்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி, பொருத்தமானவயது குழந்தைகள் அனைவருக்கும் சரியான கல்வி கிடைப்பதை உறுதிசெய்ய அரசு முயற்சி மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். பாடசாலையில் இருந்து விலகியவர்களை மீளச் சேர்க்கும் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்று கூறுகின்றார். 16 வயதுக்கு மேற்பட்டவர்கள், வயது காரணமாக வழக்கமான கல்வி அமைப்புக்கு திரும்ப இயலாத நிலை காணப்பட்டால், மாற்று கல்வி வாய்ப்புகளுக்கு அழைக்கப்படுகிறார்கள் என்றும் அவர் தெரிவிக்கிறார்.

16 வயதுக்குக் குறைந்தவர்கள், வழக்கமான பாடசாலைகளில் மீண்டும் சேர்க்கப்படுகிறார்கள் என்றால், அது அவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் ஒரு சரியான நடவடிக்கை.

அரசு, குழந்தைகளைப் பள்ளிக்கு மீள அழைப்பதில், குடும்பங்களின் பொருளாதாரச் சிரமங்களையும் கவனத்தில் எடுத்துள்ளது. ஒவ்வொரு பாடசாலை மாணவனுக்கும் பொருட்கள் வாங்க ரூ. 6,000 மற்றும் அனாதைக் குழந்தைகளுக்கு ரூ. 5,000 வழங்கப்படுகின்றன. கூடுதலாக, படை, காலணிகள், புத்தகப் பைகள் போன்ற தேவைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இது, வறுமையால் கல்வியை இழக்கும் அபாயத்தைத் தடுக்கிறது. ஆனால், வெறும் நிதி உதவி மட்டும் போதுமானதல்ல.

குழந்தைகள் பாடசாலைக்கு வராததற்கு பல காரணங்கள் உள்ளன. குடும்ப வறுமை மற்றும் வாழ்வாதார சிரமம், தெருக்களில் பிச்சை எடுக்கும் நிலை, பாதுகாப்பற்ற வேலைகளில் ஈடுபடுதல், குடும்பப் பிரச்சினைகள், உளவியல் மற்றும் மனநலம் தொடர்பான சிக்கல்கள் எனபனவும் அவற்றுள் முக்கியமான சில.

இவற்றைத் தீர்க்க முழுமையான அணுகுமுறை அவசியம். அமைச்சகத்தின் தகவலின்படி, தெருக்களில் பிச்சை எடுக்கும் குழந்தைகள், அபாயகரமான வேலைகளில் ஈடுபடும் குழந்தைகள் ஆகியோர் கண்டறியப்பட்டவுடன், அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்திற்கும் உதவி வழங்கப்படுகிறது. இது வரவேற்கத்தக்கது.

ஆனால், நடைமுறையில் பல சவால்கள் இருக்கின்றன. உதாரணமாக, ஒரு குழந்தை தெருவில் வேலை செய்யத் தள்ளப்படுவதன் காரணம், குடும்பத்தின் வருமான குறைவு எனில், பாடசாலையில் அந்தக் குழந்தை மீளச் சேர்க்கப்பட்டாலும், குடும்பத்தின் பொருளாதார நிலை மேம்படாவிட்டால் அந்தக் குழந்தை மீண்டும் வேலைக்குச் செல்ல வேண்டிய சூழல் உருவாகலாம். எனவே, பாடசாலையில் பிள்ளையை மீளச் சேர்க்கும் முயற்சியுடன், குடும்பத்தின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும் திட்டங்கள் அவசியம்.

மேலும், உளவியல் சிக்கல்கள் காரணமாக பள்ளியில் இருந்து விலகிய குழந்தைகளுக்கு, சரியான உளவியல் ஆலோசனையும், வழிகாட்டுதலும் வழங்கப்பட வேண்டும். ஆசிரியர்கள், இந்தக் குழந்தைகளின் தேவைகளைப் புரிந்து அவர்களுடன் இணைந்து செயல்படக்கூடிய வகையில் பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

நாம் கவனிக்க வேண்டிய மிக முக்கிய அம்சம் – கல்வியில் இடைவெளி அதிகமானால், குழந்தையின் மீள்சேர்க்கை சிரமமாகும். இரண்டு–மூன்று ஆண்டுகள் பாடசாலை வாழ்க்கையிலிருந்து விலகிய ஒரு குழந்தையை, அவரது வயதைக் காரணமாகக் கொண்டு மீண்டும் புதிய வகுப்பில் சேர்க்கும் போது, பாடத்திட்ட இடைவெளி, நண்பர்கள் உறவு போன்ற பல பிரச்சினைகள் உருவாகும். ஆகையால், பாடசாலை விலகலைத் தடுக்க, ஆரம்பத்திலேயே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இதற்கு, கல்வி அமைப்பு முறைக்கு வெளியிலும் பல்வேறு நடவடிக்கைகள் அவசியமாக இருக்கின்றன. சமூக கண்காணிப்பு அமைப்புகள் – கிராம நிலை அதிகாரிகள், சமூகப் பணியாளர்கள், பள்ளி ஆசிரியர்கள் இணைந்து, பள்ளி வருகையைப் பரிசோதிக்கும் முறை, பெற்றோருக்கான விழிப்புணர்வு– கல்வியின் முக்கியத்துவம், குழந்தை வேலைத் தடை சட்டங்கள், அரசு உதவித் திட்டங்கள் குறித்த தெளிவான தகவல், மாற்று கல்வி வாய்ப்புகள் – வழக்கமான பாடசாலையில் பொருந்த முடியாதவர்களுக்கு, திறன் பயிற்சிகள், தொழில் சார்ந்த பாடங்கள், பாதுகாப்பு வலையமைப்பு – தெருக்களில் அல்லது ஆபத்தான சூழலில் காணப்படும் குழந்தைகளைக் கண்டறிந்து உடனடி நடவடிக்கை என்பன முக்கியத்துவப்படுத்தப்படவேண்டும்.

கல்வியை இழக்கும் ஒவ்வொரு குழந்தையும், நாட்டின் எதிர்காலத்தில் இழப்பு ஏற்படுத்துகிறது. அவர்கள் படிக்கவில்லை என்றால், நாளைய சமூகத்தில் வறுமை, குற்றம், வேலை இல்லாமை போன்ற பிரச்சினைகள் அதிகரிக்கும் அபாயம் உண்டு.

இது தொடர்பில் ஆளும்தரப்பு எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகள் சரியான திசையில் உள்ளன. ஆனால், திட்டங்கள் காகிதத்தில் மட்டுமே இல்லாமல், உண்மையில் செயல்படவேண்டும். புள்ளிவிவரங்களைக் குறைப்பது மட்டும் இடைவிலகல் மாணவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்திவிடாது.

பாடசாலையிலிருந்து விலகிய ஒவ்வொரு குழந்தையையும் மீண்டும் கல்வியின் பாதைக்கு அழைப்பது, ஆளும்தரப்புக்கு மட்டுமல்ல, சமூகத்திற்கும் உள்ள முழுமையான பொறுப்பு. பாடசாலை மணி ஒலிக்கும் போது, எந்தக் குழந்தையும் தெருவில் அல்ல, வகுப்பறையில் இருக்கவேண்டும் இதுவே நமது கடமை, இதுவே நாட்டின் எதிர்காலத்திற்கு செய்யக்கூடிய மிகப் பெரிய முதலீடு.

# சபரிமலைக்கான யாத்திரைக்கு இலங்கை அரசு அங்கீகாரம்

*இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட புனித யாத்திரிகர் தலமாக சபரிமலை வழிபாட்டுத் தலத்தைப் பிரகடனப்படுத்தல் மற்றும் வசதிகளை வழங்கும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பக்தர்களுக்கான போக்குவரத்து மற்றும் வீசா வசதிகளை இலகுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.*

*இந்த தீர்மானம் எடுக்கப்படும் இரு பிரதான காரணிகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது. பக்தர்களுக்கான போக்குவரத்து வசதிகள் மற்றும் வீசா வசதிகள் தொடர்பிலேயே அவதானம் செலுத்தப்பட்டது. இவ்விரண்டுக்குமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதை இலக்காகக் கொண்டே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.*

*இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட புனித யாத்திரிகர் தலமாக சபரிமலை வழிபாட்டுத் தலத்தைப் பிரகடனப்படுத்தல் மற்றும் வசதிகளை வழங்கும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. நீண்டகாலமாக இலங்கையின் இந்து பக்தர்கள் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 01 ஆம் தொடக்கம் அடுத்த வருடத்தின் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்தியாவின் கேரளாவில் அமைந்துள்ள சபரிமலை ஐயப்பன் ஆலயத்தி;ற்குச் சென்று தரிசிக்கின்றனர்.*

*தற்போது ஆண்டுதோறும் 15,000 இற்கும் அதிகமான இலங்கையின் இந்து பக்தர்கள் கலந்து கொள்கின்ற தலயாத்திரை மையமாகவும் அமைந்துள்ளது. அதற்கமைய, இந்தியாவின் கேரளா மாநிலத்தில் அமைந்துள்ள சபரிமலை ஐயப்பன் ஆலயத்திற்கு இலங்கை இந்து யாத்திரிகர்களால் மேற்கொள்ளப்படுகின்ற வழிபாட்டு தரிசிப்பானது, இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட புனித தலயாத்திரையாகப் பிரகடனப்படுத்துவதற்கு புத்தசாசன, சமய மற்றும் காலாசார விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.*

# தமிழர் தாயகம் கைப்பற்றப்படுகிறது தமிழ் எம்.பிக்கள் என்ன செய்கிறார்கள்?

## பிரித்தானிய தமிழர் பேரவை கேள்வி

*தமிழர்தாயகம்அமைதியாகக்கைப்பற்றப்படும் வேளையில் நமது நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிவில் சமூக அமைப்புகளும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? நமது உரிமைகளையும் நமது அடையாளத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவர்களிடமிருந்து ஏன் இவ்வளவு தேவையற்ற மௌனம் நிலவுகிறது?என பிரித்தானிய தமிழர் பேரவை கேள்வி எழுப்பியுள்ளது*

*தமிழ் மக்களின் நிலமான மணலாற்றின் தற்போதைய நிலை குறித்த அறிக்கையொன்றில் இதனை தெரிவித்துள்ள பிரித்தானிய தமிழர் பேரவை மேலும் தெரிவித்துள்ளதாவது:*

*இலங்கையின் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள வரலாற்று ரீதியாக தமிழ் பிராந்தியமான மணல் ஆறு கடந்த பல தசாப்தங்களாக ஒரு சோகமான மாற்றத்தைச் சந்தித்துள்ளது. ஒரு காலத்தில் துடிப்பான தமிழ் கிராமமாக இருந்த இது வளர்ச்சி என்ற போர்வையில் வலுக்கட்டாயமாக மறுபெயரிடப்பட்டு சிங்களமக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். குறிப்பாக மதுரு ஓயா நீர்ப்பாசனத் திட்டம் மூலம்*

*1988 ஏப்ரல் 16 அன்று இலங்கை ஆளும்தரப்பின் வர்த்தமானி அறிவிப்பில் மணல் ஆறு என்ற பெயரை வேலி ஓயா என்ற சிங்களப் பெயராக அதிகாரப்பூர்வமாக மறுபெயரிட்டது. இது வெறும் மறுபெயரிடுதல் அல்ல - இது பிராந்தியத்தின் மக்கள்தொகை மற்றும் காலாசார அடையாளத்தை மாற்றுவதற்கான ஒரு பரந்த மற்றும் கணக்கிடப்பட்ட உத்தியின் ஒரு பகுதியாகும்*

### கட்டாய இடப்பெயர்வு மற்றும் வன்முறை

*1984 டிசம்பர் 1 முதல் 15 வரை முல்லைத்தீவுக்கும் திருகோணமலைக்கும் இடையில் அமைந்துள்ள தமிழ் கிராமங்களில் ஒருங்கிணைந்த படுகொலைகள் நடத்தப்பட்டன. இந்தக் கொடூரமான தாக்குதல்கள் தமிழ் பொதுமக்களை குறிவைத்தன அவர்களில் பலர் பல நூற்றாண்டுகள் பழமையான நிலத்துடன் மூதாதையர் உறவுகளைக் கொண்டிருந்தனர். உயிர் பிழைத்தவர்கள் தங்கள் வீடுகளில் இருந்து விரட்டியடிக்கப்பட்டனர் மேலும் இப்பகுதியில் அரசால் ஆதரிக்கப்படும் சிங்களக் குடியேற்றம் தீவிரமாகத் தொடங்கியது*

*அபிவிருத்தி என்ற பெயரில் சிங்களக் குடியேறிகள் கொண்டுவரப்பட்டனர் இலங்கை இராணுவத்தால் பெரிதும் பாதுகாக்கப்பட்டனர். வெளியேற்றப்பட்ட மற்றும் இடம்பெயர்ந்த தமிழ் பூர்வீக மக்கள் வறுமையில் வாடினர் அவர்களின் நிலங்கள் வாழ்வாதாரங்கள் மற்றும் காலாசார பாரம்பரியத்தை அணுகுவதில் அவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்பு கிடைத்தது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்ற கொடூரமான சட்டங்களின் பயன்பாடு அத்தகைய செயல்களுக்கும் தண்டனையிலிருந்து விலக்குக்கும் சட்டப்பூர்வ மறைப்பை வழங்கியது.*

### மக்கள்தொகை மாற்றம் மற்றும் முறையான காலனித்துவம்

*1980 களில் இருந்துஇ குறிப்பாக 2009 இல் போர் முடிவடைந்த பின்னர் அரசு ஆதரவுடன் ஆக்கிரமிப்பு தொடர்ந்தது. சிங்களக் குடியேற்றங்கள் எண்ணிக்கையிலும் உள்கட்டமைப்பிலும்வளர்ந்துள்ளன அதே நேரத்தில் தமிழ் சமூகங்கள் ஓரங்கட்டப்பட்டவை வளங்கள் குறைவாக உள்ளன மேலும் பெரும்பாலும் இராணுவத்தால் அச்சுறுத்தப்படுகின்றன அல்லது கண்காணிக்கப்படுகின்றன.*

*மக்கள்தொகை வரைபடங்கள் 2015 இல் பெரும்பான்மையான தமிழர் பகுதியான வெலி ஓயாவின் தற்போதைய நிலைக்கு ஆபத்தான மாற்றத்தை எடுத்துக்காட்டுகின்றன - பல தசாப்தங்களாக திட்டமிடப்பட்ட இடம்பெயர்வு மற்றும் காலனித்துவத்தின் காட்சி பிரதிநிதித்துவம்.*

*தமிழர்தாயகம்அமைதியாகக்கைப்பற்றப்படும் வேளையில் நமது நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிவில் சமூக அமைப்புகளும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? நமது உரிமைகளையும் நமது அடையாளத்தையும்பாதுகாக்கும்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவர்களிடமிருந்து ஏன் இவ்வளவு தேவையற்ற மௌனம் நிலவுகிறது?*

### நமது மொழி நமது நிலம் நமது எதிர்காலம்

*நிலம் என்பது வெறும் மண் அல்ல - அது காலாசாரம் அடையாளம் நினைவகம் மற்றும் எதிர்காலம். நமது நிலத்தின் அரிப்பு நமது மொழி மதம் மற்றும் வாழ்க்கை முறையின் உயிர்வாழ்வை நேரடியாக பாதிக்கிறது.*

*கடந்த 77 ஆண்டுகளில் நாம் அதிகமாக இழந்துவிட்டோம். இப்போது எழுந்து செயல்பட வேண்டிய நேரம் இது. நமது நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கவும் நமது தமிழ் தாயகத்தைப் பாதுகாக்கவும் பொக்கிஷமாகக் கருதவும் நீதியைக் கோரவும் நாம் ஒன்றிணைய வேண்டும் - நாளை அல்ல அடுத்த ஆண்டு அல்ல - இப்போதே.*

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557



JDr

JDR CARE HOME & MEDICALS



மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு



FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care



BOOK NOW
0701348384

46,Brodie Lane, Jaffna



புதிய கல்வியாண்டு 2025
zoom
76667-4945



LEARN EASY
KNOWLEDGE IS POWER

January 25 FREE
February 5

தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT

தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை



Study MBBS in China

SLMC APPROVED

Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS



JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN



CONTACT US FOR ADMISSION
0701348384

காலைக்கதிர் Kalaikkathir

## புதிய பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் பதிவி வெறிதாக்கப்பட்டுள்ளமை மற்றும் பொலிஸ் மாஅதிபர் பதவிக்கு அரசுத் தலைவரால் முன்மொழியப்பட்ட பரிந்துரை தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்போது பேரவையின் சகல உறுப்பினர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.

தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்குவதற்கான தீர்மானம் நாடாளுமன்றத்தில் 2025.08.05 ஆம் திகதியன்று 177 வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டதைசபாநாயகர்அரசுத்தலைவருக்கு எழுத்துமூலமாக அறிவித்திருந்தார்.

இதற்கமைய நாட்டின் 37 ஆவது பொலிஸ்மா அதிபராக பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரியவை நியமிப்பதற்கு அரசுத் தலைவர் அரசியலமைப்பின் 41 (ஆ) (1) மற்றும் 61 (5) (அ) ஆகிய தத்துவங்களால் வழங்கப்பட்ட அதிகாரத்துக்கமைய அரசமைப்பு பேரவைக்கு பரிந்துரையை முன்வைத்தார்.

அரசுத் தலைவரால் முன்வைக்கப்பட்ட பரிந்துரை தொடர்பில் ஆராய்வதற்கு அரசமைப்பு பேரவை இன்று அதன் தலைவர் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியது. இதன்போது அரசுத் தலைவரின் முன்மொழிவுக்கு பேரவையின் சகல உறுப்பினர்களும் இணக்கம் தெரிவித்ததை தொடர்ந்து ஏகமனதாக அங்கீகாரமளிக்கப்பட்டது.

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக பணியாற்றுவதற்கு உயர்நீதிமன்றம் கடந்த ஆண்டு ஜூலை மாதம் இடைக்காலத் தடைவிதித்தது. இதனைத் தொடர்ந்து பொலிஸ் மாஅதிபர் பதவி வறிதான நிலையில் நியமனம் வழங்குவது இழுபறி நிலையில் காணப்பட்டது.

அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்ததன் பின்னர் 2024 செப்டெம்பர் மாதம் பிரதி பொலிஸ்மா அதிபராக பதவி வகித்த பிரியந்த வீரசூரியவை பதில் பொலிஸ் மாஅதிபராக நியமித்தமை குறிப்பிடத்தக்கது.

## பாதுகாப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளார்கள். அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பொதுஜனபெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவின் பணியிடத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் முழுமையான அரசியலாகி விட்டது. குண்டுத்தாக்குதல்கள் பற்றி போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

பாதுகாப்புபிரதிஅமைச்சர்அருணஜயசேகர உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றபோது கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக செயற்பட்டார். இவர் தனது பதவிக்கானபொறுப்பில் இருந்துவிலகியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவ்வாறு குற்றச்சாட்டுக்குள்ளானவரை பதவியில் வைத்துக்கொண்டு எவ்வாறு சுயாதீனமான முறையில் விசாரணைகள் இடம்பெறும் என்பதில் பாரிய சந்தேகம் காணப்படுகிறது. ஆகவே இவருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்போம்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் கிடைத்த புலனாய்வுத்தகவல்களை கொண்டு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காமல் அவற்றை அலுவலக மேடையில் பத்திரப்படுத்தி வைத்தவர்கள் இந்த அரசுத் தரப்பில் உயர் பதவிகளில் உள்ளார்கள். அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# பிரதமரைச் சந்தித்தார் இந்தியத் தூதுவர் ஷா

தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு விரைவான தீர்வுகளை வழங்குவதன் அவசியம் குறித்தும், சிறந்த கல்வி வாய்ப்புகளையும் கல்வியின் தரத்தையும் மேம்படுத்துவதற்காக இலங்கையில் நடைமுறைப்படுத்த இருக்கும் கல்விச் சீர்திருத்தங்கள் குறித்தும் பிரதமர் ஹரிணி இந்திய உயராணையருக்கு எடுத்துரைத்தார்.

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் இந்தியத் திட்டங்கள் குறித்தும், குறிப்பாக பெருந்தோட்டப் பாடசாலைத் திட்டங்கள், ஸ்மார்ட் வகுப்பறைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சித் திட்டங்கள் குறித்தும் இந்திய உயராணையர் பிரதமருக்கு எடுத்துரைத்தார்.

பிரதமர் ஹரினிக்கும் இந்திய உயராணையர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையில் திங்கட்கிழமை பிரதமர் அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது, கல்வித் துறையில் இரு நாடுகளுக்கும் இடையே வலுவான ஒத்துழைப்பை கட்டியெழுப்புவதன் அவசியத்தை பிரதமர் வலியுறுத்தியதோடு, கல்வித் துறைசார் அதிகாரிகளின் தலைமைத்துவம் மற்றும் திட்டமிடல் திறன்களை மேம்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்களின் தேவையையும் அவர் வெளிப்படுத்தினார்.

தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு விரைவான தீர்வுகளை வழங்குவதன் அவசியம் குறித்தும், சிறந்த கல்வி வாய்ப்புகளையும் கல்வியின் தரத்தையும் மேம்படுத்துவதற்காக இலங்கையில் நடைமுறைப்படுத்த இருக்கும் கல்விச் சீர்திருத்தங்கள் குறித்தும் பிரதமர் எடுத்துரைத்தார்.

இதற்குப்பதிலளித்த இந்திய உயராணையர் சந்தோஷ் ஜா, இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் இந்தியத் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தார். குறிப்பாக, பெருந்தோட்டப் பாடசாலைத் திட்டங்கள், ஸ்மார்ட் வகுப்பறைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சித் திட்டங்கள் குறித்தும் அவர் விரிவாகத் தெளிவுபடுத்தினார்.

கல்வித் துறையில் தொடர்ந்தும் நெருக்கமாகப் பணியாற்ற இந்திய அரசாங்கம் ஆர்வமாக இருப்பதாகத் தெரிவித்த உயராணையர், இரு நாடுகளின் பல்கலைக்கழகங்களுக்கு இடையே புலமைப்பரிசில்களை வழங்குவதற்கான ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்வில் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புப் பிரிவின் இரண்டாம் நிலை செயலாளர் அசோக் ராஜு, வணிகப் பிரிவின் முதலாம் நிலை செயலாளர் , கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ ஆகியோரும் கலந்துகொண்டனர்.




# தேசிய பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர் ரேணுகா ஏக்கநாயக்க திடீர் பதவி விலகல்

தேசிய பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர் பதவியிலிருந்து ரேணுகா ஏக்கநாயக்க பதவி விலகியுள்ளார்.

ரேணுகா ஏக்கநாயக்க முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் மனைவி ஆவார்.

அவரது பதவி விலகல் கடிதம் அரசமைப்பு சபைக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பில் வாக்குமூலம் அளிக்க சமன் ஏகநாயக்க குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிதிக் குற்றப் பிரிவுக்கு அழைக்கப்பட்ட சில நாட்களுக்குப் பின்னர் திருமதி ரேணுகா ஏக்கநாயக்க தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

இதேவேளை, பொலிஸ் மா அதிபர் பதவியிலிருந்து தேசபந்து தென்னக்கோனை நீக்குவதற்காக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை சபாநாயகர், அரசுத் தலைவர்க்கு அனுப்பி வைத்துள்ள நிலையில், பொலிஸ்மா அதிபர் பதவியும் வெற்றிடமாகியுள்ளது.

அதன்படி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் தற்போது இரு உயர் பதவிகளில் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை – இந்திய கடற்படைகளின் கூட்டுப் பயிற்சி நாளை தொடக்கம்

2025ஆம் ஆண்டுக்கான இலங்கை கடற்படைக்கும் இந்திய கடற்படைக்கும் இடையேயான 12 ஆவது வருடாந்த இருதரப்பு கூட்டு பயிற்சி (ரீஸிணுரஹிசியீ-2025 ) எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி இரண்டு கட்டங்களாக நடத்தப்படவுள்ளது. அன்படி, 14 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை கொழும்பு துறைமுகம் சார் பயிற்சியும், அதனை தொடர்ந்து 17 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை கொழும்பில் கடல்சார் பயிற்சியும் நடைபெறும்.

இந்த பயிறச்சிகளில் இந்திய கடற்படையில் ஐஎன்எஸ் ஜோதி (கப்பற்படை டேங்கர்) மற்றும் ஐஎன்எஸ் ராணா (அழிப்பான்) ஆகிய கப்பல்கள் பங்கேற்க உள்ளன.

இலங்கை கடற்படையில் எஸ்எல்என்எஸ் விஜயபாகு (முன்னேற்ற ஆஃப்ஷோர் ரோந்து கப்பல்) மற்றும் எஸ்எல்என்எஸ் சயுரா (நுஊணா) ஆகிய கப்பல்கள் பங்கேற்க உள்ளன.

மேலதிகமாக இலங்கை விமானப்படையின் பிஇஎல் 412 ஹெலிகொப்டர்களும் இந்துப் பயிற்சியில் பங்கேற்க உள்ளது. இரு கடற்படைகளின் விசேட படைகளும் பயிற்சியை மேற்கொள்ளும்.

இதற்கு முன்னர் இந்த பயிற்சி 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது.

இந்த பயிற்சி இரு கடற்படைகளுக்கும் இடையேயான பன்முக கடல்சார் நடவடிக்கைகளில் இடை-செயல்பாட்டை மேம்படுத்துதல், பரஸ்பர புரிதலை மேம்படுத்துதல் மற்றும் விசேட நடைமுறைகள்/நடைமுறைகளைப் பரிமாறிக் கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

துறைமுக கட்டத்தில் விளையாட்டுப் போட்டிகள், யோகா அமர்வு மற்றும் காலாசார நிகழ்வுகள் ஆகியவை அடங்கும்.

இது இரு கடற்படைகளின் பணியாளர்களும் ஒருவருக்கொருவர் கற்றுக்கொள்ளவும், பகிரப்பட்ட மதிப்புகளை மீண்டும் வலுப்படுத்தவும், நட்பு மற்றும் தோழமையின் பிணைப்புகளை உருவாக்கவும் வாய்ப்பளிக்கும்.

இலங்கை கடற்படை தலைமையகத்தின் பணிப்பாளர் ரியர் அட்மிரல் பி லியனகமகே, ஐஎன்எஸ் ஜோதியின் கட்டளை அதிகாரி, கேப்டன் சேதன் ஆர் உபாத்யாயா மற்றும் ஐஎன்எஸ் ராணாவின் கட்டளை அதிகாரி, கேப்டன் கேபி ஸ்ரீசன், இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேப்டன் ஆனந்த் முகுந்தன் ஆகியோர் பயிற்சியின் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

## இலங்கையில் முதலிடுவதில் வியட்நாம் தரப்புகள் ஆர்வம்

அரசுத் தலைவர் அநுரகுமார மற்றும் வியட்நாமின் ரொக்ஸ் குழுமத்தின் ஆலோசனைக் குழுவின் தலைவர் மற்றும் கடல்சார் வணிக கூட்டு பங்கு வங்கியின் (MSB) தலைவர் டிரன் அன் துவன் (Tran Anh Tuan) உள்ளிட்ட பிரதிநிதிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் இன்று (12) பிற்பகல் அரசுத் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கையில் தற்போதைய ஸ்திரத்தன்மை மற்றும் முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழலைக் கருத்தில் கொண்டு, இலங்கையில் முதலீடு செய்யத் தயாராக இருப்பதாக ரொக்ஸ் நிறுவனத்தின் பிரதிநிதிகள் இங்கு தெரிவித்தனர்.

அதன்படி, இந்நாட்டில் ஒரு தொழில்துறை வலயத்தை நிறுவுவதற்கு ஆளும்தரப்பின் ஆதரவை எதிர்பார்ப்பதாக அவர்கள் தெரிவித்தனர். அதேபோன்று புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் ஆதன விற்பனைத் துறைகளில் முதலீடு செய்ய எதிர்பார்ப்பதாகவும் அவர்கள் அரசுத் தலைவர்யிடம் தெரிவித்தனர். அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்காக காணியை அடையாளம் காணவும், தேவையான நிறுவன ஆதரவைப் பெறவும் இந்த விஜயத்தை மேற்கொள்வதாக அவர்கள் தெரிவித்தனர்.

இங்குகருத்துத்தெரிவித்த அரசுத்தலைவர், இலங்கையில் ஊழல் இல்லாத சூழல் உருவாக்கப்பட்டுள்ளதால், முதலீடுகளுக்கு நிறுவன மட்டத்தில் சாத்தியமான அனைத்து ஆதரவையும் வழங்க அரசாங்கம் தயாராக உள்ளது என்றும் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும், இந்நாட்டில் பாரிய அளவிலான முதலீடுகளுக்குத் தயாராக இருப்பதாகவும் ரொக்ஸ் குழுமத்தின் தலைவர் உட்பட ஏனைய பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ரொக்ஸ் குழுமத் தலைவர் குயென் தி குயெட் ஹூவொங் (Nguyen Thi Nguyet Huong), பிரதான அதிகாரி (வலுசக்திப் பிரிவு) லு லெ சி( Luu Le Chi) ஆகியோருடன் அரசுத் தலைவர்யின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் அரசுத் தலைவர்யின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த 40 கிலோ கஞ்சா வேலணையில் மன்னார் பொலிஸாரால் மீட்பு

யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை பொலிச் பிரிவிற்குட்பட்ட வேலணைப் பகுதியில் சுமார் 40 கிலோவிற்கும் அதிகமான கஞ்சா போதைப்பொருள் நிலத்திற்கு கீழ் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது

வேலணை கடற்கரை பகுதியில் நிலத்தில் பெரும் கிடங்கு வெட்டி அதனுள் பெருமளவான கஞ்சா போதைப்பொருள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸாருக்குகிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தக் கஞ்சா மீட்க்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு மன்னாரில் இருந்து வருகை தந்த சிறப்பு பொலிஸ் குழுவினர் நிலத்தின் கீழ் புதைத்து வைத்திருந்த இந்தக் கஞ்சாவை மீட்டுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய வேலணையை சேர்ந்த மூன்று சந்தேக நபர்கள் ஊர்காவற்றுறை பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்

கஞ்சா போதைப்பொருளை இந்தியாவில் இருந்து படகு மூலம் கடத்தி வந்து , அவற்றை கடற்கரையை அண்டிய பகுதியில் நிலத்தில் புதைத்து வைத்திருக்கலாம் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கஞ்சா போதைப்பொருளுடன் தொடர்புடைய நபர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்

## ராஜிதவைக் கைது செய்ய பிடியாணை பிறப்பிப்பு

இலஞ்சஒழிப்பு ஆணைக்குழுவின் விசாரணையில் சந்தேகநபராகப் பெயரிடப்பட்ட முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை கைது செய்து ஆஜர்படுத்த கொழும்பு நீதவான் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை பிடியாணை பிறப்பித்துள்ளது.

ராஜித சேனாரத்ன வாக்குமூலம் அளிப்பதைத் தவிர்த்து விசாரணைகளுக்கு இடையூறு விளைவிப்பதாக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு முன்வைத்த வாதங்களை கருத்தில் கொண்டு, கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

## மட்டுவில் பொருளாதார மத்திய நிலையம் செம்ரெம்பர் இறுதிக்குள் திறக்கப்படுமாம்

தென்மராட்சி மட்டுவிலில் அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையம் செப்ரெம்பர் இறுதிக்குள் திறந்து வைக்கப்படும் என கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

மட்டுவிலில் அமைந்துள்ள கைத்தொழில் நிலையத்தினை நேற்றுக் காலை பார்வையிட்ட அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர், ஆளுநர் உள்ளிட்ட குழுவினர் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அதனை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடலையும் நடத்தினர்.

இதன் போது வர்த்தகர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், யாழ்ப்பாணம் மாவட்டச்செயலாளர் பிரதீபன் மாநகர சபை ஆணையாளர்,



அமைச்சின் அதிகாரிகள் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் கருத்து தெரிவித்த அமைச்சர், கடந்த அரசாங்கம் பல தடவைகள் ஆரம்பிப்பதாக தெரிவித்த மட்டுவில் பொருளாதாரம் மத்திய நிலையம் அடுத்த மாதம் இறுதிக்குள் திறந்து வைக்கப்படும் என தெரிவித்தார்.

மேலும் வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்பு பிரச்சினைகள் பொருளாதார மத்திய நிலையத்தில் காணப்படும் குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் உள்ளிட்ட விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.08.2025இல் வெளியிடப்பெற்றது